பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 26 வெள்ளிக்கிழமை 12.11.2021 கதிர் 235

## மூன்று வருடங்களின் பின் சிகரெட் விலை அதிகரிப்பு

சிகரெட் விலையை 5 ரூபாவால் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்மூலம் 8 பில்லியன் (800 கோடி) ரூபா மேலதிக வருமானம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார். 2

## நவீன வசதிகளுடன் யாழ். இந்துவின் விளையாட்டுத் திடல் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் இன்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் பிரித்தானியக் கிளையின் நிதிப்பங்களிப்பில் 5.5 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இந்த விளையாட்டுத் திடல் கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (மிகுதி செய்தி 8ஆம் பக்கத்தில்)



(இ.கலையமுதன்)

# அரச துறை செலவீனங்களைக் குறைத்து முன்வைக்கப்பட்ட பஸிலின் கன்னி 'பட்ஜட்'

## ஓய்வூதிய வயது 65 ஆக உயர்வு; எம்.பிக்களுக்கான ஓய்வூதியத் தகுதிக்காலம் 10 வருடங்களாக நீடிப்பு

அரச செலவீனங்களைக் குறைப்பதற்காக புதிய அரச அலுவலகங்கள் அமைப்பதற்கு இரண்டு வருடங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றது என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அவர், தமது அரசால் முன்வைக்கப்பட்ட யோசனைகளையும் வரிசைப்படுத்தியுள்ளார். அவரால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் வருமாறு:–

1) அரச செலவீனங்களை குறைப்பதற்காக புதிய அரச அலுவலகங்கள் அமைப்பதற்கு இரண்டு வருடங்களுக்குத் தடை.

2) மின்சாரத் தேவையாக சூரிய சக்தியை பெற்றுக்கொள்ளவும், அரச அலுவலகங்களின் தொலைபேசி பாவனையை 25 வீதம் குறைக்கவும் யோசனை.

3) அனைத்து அரச பணியாளர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு, புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

4) அரச சேவையின் பணியாளர்களது ஓய்வூதிய வயது 65 ஆக உயாத்தப்படுகின்றது. 2



## காணாமல்போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்க 30 கோடி ரூபா ஒதுக்கீடு!

காணாமல்போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேலதிகமாக 30 கோடி ரூபா ஒதுக்கப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல்வேறு காலப்பகுதியில், பல்வேறு காரணங்களால் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதிக்கு மேலதிகமாகவே இந்த 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2

### தமிழ்க் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

## பருத்தித்துறை பிரதேச சபையின் 'பட்ஜட்' அமோக ஆதரவுடன் வெற்றி

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

சபையின் விசேட கூட்டம் இன்று காலை சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

வரவு - செலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட்டபோது 16 உறுப்பினர்கள் ஆதர 2

## தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை; பிரிட்டன் தூதருடன் கூட்டமைப்பு பேச்சு!



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹில்டன் அம்மையாரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

கொழும்பில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 2

## 23 இந்திய மீனவர்களுக்கும் நவ. 15 வரை மறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

எல்லைதாண்டிமீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைதுசெய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்தே பருத்தித்துறை நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 23 பேர் 2

## நெடுந்தீவில் அதிகளவு மழைவீழ்ச்சி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத் 2

## தமிழ் மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

## 23 இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பிலும் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி லோ.குகதாஸ் ஆஜராகியிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட 23 மீனவர்களுக்கு எதிராகவும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமை, தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் வைத்திருந்தமை, அனுமதிப் பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை போன்ற மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 15ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்தார்.

மீனவர்கள் வழக்கு விசாரணைகளுக்கு யாழ். இந்தியத் துணை தூதரக அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்.

இந்திய மீனவர்களுக்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி சார்பில் சட்டத்தரணி ஜோய் மகாதேவாவும் ஆஜராகியிருந்தார்.

## நெடுந்தீவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 119.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் கடும் மழையின் தாக்கத்தால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் உறவினர்களது வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## பருத்தித்துறை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் (அ.சா.அரியகுமார், கு.தினேஸ், க.தவயோகநாதன், த.சந்திரதாஸ், க.சிறீகாந்தரூபன், சி.தியாகலிங்கம், ஆ.சுரேஷ்குமார், சி.பிரசாத்), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும் (கி.ஜெயபாலன், ஞா.தர்சன், திருமதி வி.றஜீதா, திருமதி சி.கவிதா), தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும் (வே.பிரசாந்தன், எட்வேட் எட்வின்), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் (கா.அரசரட்னம்), ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஓர் உறுப்பினரும் (பொ.பிரேமதாஸ்) வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஈ .பி.டி.பியின் சார்பில் கலந்துகொண்ட ஒரேயோரு உறுப்பினர் (செ. செபஸ்தியன்) மாத்திரம் எதிராக வாக்களித்தார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கின.

எஞ்சிய ஈ.பி.டி.பியின் 2 உறுப்பினர்களும் (செல்வி. த.சாந்தாதேவி, திருமதி. ப.கலாவதி), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் (நா.பாலரமேஸ்), ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு உறுப்பினரும் (இ.நாகேந்திரராசா) கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

## காணாமல்போனோரின் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், 2015 - 2019 காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு, நிவாரணம் வழங்க மேலதிகமாக 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## மூன்று வருடங்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 3 வருடங்களுக்கு பின்னர் சிகரெட் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது எனவும் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## அரச துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5) அனைத்துப் பாடசாலைகளுக்கும் நவீன இணைய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

6) ஒட்டோக்களுக்கான அதிகார சபை அமைக்கப்படவுள்ளது.

7) ஓய்வூதியம் பெறாத சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஓய்வூதியத் திட்டம். இதற்காக 100 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது.

8) புதிய வியாபாரங்களுக்கு 2022 இல் பதிவுக்கட்டணங்கள் அறவிடப்படாது.

9) நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் தகுதிக்காலம் 10 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

10) சேதனப் பசளையை ஊக்குவிக்க கிராம சேவகர் மட்டத்தில் திட்டம் முன்னெடுக்கப்படும்.

11) வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க, நிபந்தனைகளை தளர்த்துவதற்கு திட்டங்கள் விரைந்து முன்னெடுக்கப்படும்.

12 ) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு செல்வோருக்கான பயிற்சிகள் மேம்படுத்தப்படும்.

13) அரச சேவையாளர்களுக்கான எாபொருள் 5 லீற்றர்களால் குறைக்கப்படும். மாதாந்த தொலைபேசி கட்டணம் 25 வீதத்தால் குறைக்கப்படும்.

**நிதி அமைச்சரின் உரை**

ஏற்றுமதி தொழிற்சாலைகளை மீண்டும் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சௌபாக்கிய நோக்கு திட்டத்தில்அதற்கானபரந்தவாய்ப்புகளை உருவாக்கியுள்ளோம்.

கடன் நெருக்கடிக்கு மத்தியிலும் 2 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் இரண்டினை செலுத்தியுள்ளோம். 2018 ஏப்ரல் 2019 ஜூலை மாதம் வரையில் 15 மாதங்களில் 6.9 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டிய பாரிய சுமை எமக்குச் சுமத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தின் அதிக செலவு - கடன்களுக்கான வட்டியை செலுத்தவே ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மூலமாக கிடைத்த 5 பில்லியன் ரூபா கிடைக்காது போயுள்ளது , வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் மூலமாக கிடைக்க வேண்டிய நிதியும் குறைவடைந்துள்ளது.

உற்பத்திப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமையும், நாட்டில் பொருளாதாரத்தை உற்பத்தி பொருளாதாரத்தின் பக்கம் கொண்டுசெல்லும் வேலைத்திட்டம் அவசியமாகின்றது. வாழ்வாதார விலைவாசி அதிகரிப்பு சவால்கள், நிலையான தீர்வைப் பெற்றுக்கொடுக்க எந்த அரசுக்கும் முடியாமல் போனமையே உண்மையாகும்.

வியாபார மாபியா மற்றும் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தும் தரகர்கள் சமூகத்தில் கலந்துள்ளனர். இது குறித்து சகலரும் அவதானமாக இருக்க வேண்டும். சர்வதேச போதைப்பொருள் மாபியாக்குள் இலங்கையை சிக்கவைக்கும் முயற்சி இன்றும் பலமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இளைஞர்களே இதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஆசிய வலயத்தின் ஏனைய நாடுகளை விடவும் எம்மால் விரைவாக மீட்சி காண முடியும் என்ற நம்பிக்கை எம்மிடத்தில் உள்ளது. ஆசியக் கண்டத்தின் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட நாடாகவே இலங்கையை பலர் அடையாளப்படுத்துகின்றனர் - என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்காக இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட விவாதத்தை சைகை மொழியில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


விளம்பரத் தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம்-

076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்

68 ஆவது இதழ் வெளிவந்துவிட்டது

வாசித்துவிட்டீர்களா?

வடக்கு மாகாணத்தின் அடுத்த முதலமைச்சர்(வேட்பாளர்) யார்?(03)



சிறைக்குள் .....



ஜெய் பீம்

சாவிகள் (சிறுகதை)

கந்தபுராணம்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்

செம்மணி

உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்

076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சர்ச்சையில் சீன உறவு

சேதன உரத்தை இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கை அரசுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி புதிய கட்டத்துக்குள் பிரவேசித்து இருக்கின்றது.

இலங்கைக்கு சீனத் தரப்பு அனுப்பி வைத்த மேற்படி சேதன உரத்தின் மாதிரிகளை இலங்கை தனது தேசிய தாவரங்கள் தனிமைப்படுத்தல் சேவை அமைப்பு ஊடாகச் சோதனை நடத்தி விட்டது – ஒன்றுக்கு இரண்டு தடவைகள். தீங்கை விளைவிக்கும் பக்டீரியா உருவாகும் நிலைமை இந்த மாதிரிகளில் இருப்பதால் இந்த உரத்தை ஏற்கமுடியாது, அது தரமற்றது என இலங்கை திட்டவட்டமாக அறிவித்த பின்னரும், சீனா விடுவதாக இல்லை.

அந்த உரத்தை ஏற்றிய கப்பல் இலங்கை துறைமுகத்தை அண்டி காத்துக் கிடக்கின்றது. அந்த உரத்தை இறக்குமதி செய்து கொண்டு, உரிய கொடுப்பனவை வழங்குமாறு சீனா வற்புறுத்துகின்றது. ஆனால் இலங்கையோ அந்தக் கோரிக்கையை ஏற்க மறுக்கின்றது.

இலங்கையின் மேற்படி தேசிய தாவரங்கள் தனிமைப்படுத்தல் அமைப்பு முன்னெடுத்த பரிசோதனை சர்வதேச நியமங்களுக்கு அமைவானது அல்ல என்று விமர்சித்து இருக்கும் சீனா, அத்தகைய தவறான முடிவைப் பெற்று அறிவித்த அந்த அமைப்பின் தலைவர் தமது நிறுவனத்திற்கு எண்பது லட்சம் அமெரிக்க டொலரை உடனடியாக நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக் கடிதத்தையும் அனுப்பியிருக்கிறது.

ஆனாலும் இலங்கைத் தரப்பு மசிவதாக இல்லை.

தங்கள் நிறுவனம் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா உட்பட 16 நாடுகளுக்கு சேதன உரத்தை ஏற்றுமதி செய்வதாகவும் –

இச்சூழலில் இலங்கையின் இந்த நிராகரிப்பு அறிவிப்பு சர்வதேச ரீதியில் தங்கள் நிறுவனத்துக்கு பெரும் அபகீர்த்தியையும் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது எனவும் – அந்தச் சீன நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பின்புலத்தில் மேற்படி இலங்கைக்கு எனத் தான் கப்பலில் அனுப்பிய உரத்தின் மாதிரியை சர்வதேச ரீதியில் மதிப்பு வாய்ந்த – சர்வதேச நியமங்களுக்கு அமையப் பரிசோதனைகளை நடத்துகின்ற – மூன்றாம் தரப்பு ஆய்வுகூடத்தில் தான் பரிசோதித்து இருப்பதாகவும், அந்த மாதிரிகளில் தீங்கு தரும் ஏதேனும் உள்ளடக்கம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அந்நிறுவனம் இப்போது அறிவித்துள்ளது.

ஆனால் மூன்றாம் தரப்பின் தரச் சான்றிதழைத் தாங்கள் ஏற்கவோ, அங்கீகரிக்கவோ, அதன் அடிப்படையில் அந்த உரத்தை ஏற்றுக்கொள்ளவோ தயாரில்லை என இலங்கை விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உடித் கே ஜயசிங்க முதலிகே தெரிவித்துவிட்டார்.

மேற்படி உரத்துடன் வந்துள்ள சீனக் கப்பல் திரும்பிப் போகத்தான் வேண்டும். அதற்காக நஷ்ட ஈடோ, இழப்பீடோ வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கின்றார். வெளிப்படையாக பார்த்தால் இது ஒரு தொகுதி உரத்தை கொள்வனவு செய்வது தொடர்பாக வாங்கும் தரப்புக்கும் விற்கும் தரப்புக்கும் இடையிலான ஓர் இழுபறி போலத்தான் இது தோற்றுகின்றது.

ஆனால் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர ஊடாட்டங்களில் – பொருளாதார உறவு நிலைகளில் – ஆழமான ரணகளத்தை – பாதிப்பை – ஏற்படுத்தும் விவகாரமாக இது மாறும் சூழல் தென்படுகின்றது.

இந்த நெருக்கடியை கொழும்பு எப்படிச் சமாளிக்கப் போகிறது? அடுத்து வரும் வாரங்களில் விவகாரத்தின் விளைவு மெல்ல வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.

# உரத்தை நிராகரித்தமையால் கொழும்பிற்கு சீனா அழுத்தம்

சீன நிறுவனமொன்றிடமிருந்து உரத்தைப் பெறும் செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் நிராகரித்ததை அடுத்து, பீஜிங் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக உலகளாவிய சிந்தனைக் குழுவான கொள்கை ஆய்வுக் குழு தெரிவித்துள்ளது.

இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தி இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் என கடந்த ஏப்ரல் மாதம் இலங்கை அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது.

இதனால் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் முரண்பாடான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

எனினும், சில இறக்குமதிகளைச் செய்வதாக இருந்தால் உரங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் இலங்கை அரசாங்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் 380 கோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கியது.

அத்துடன், சீனாவின் கிங்டாவோ சீவின் பயோடெக் குரூப் லிமிடெட் நிறுவனத்தை கரிம உரங்களை வழங்குவதற்குத் திறந்த ஏலத்தின் மூலம் இலங்கை தேர்ந்தெடுத்தது என கொள்கை ஆய்வுக் குழுவின் அறிக்கை கூறுகின்றது.

சீன நிறுவனத்திடமிருந்து 6.3 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் 99 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்ய இலங்கை அரசாங்கம் தீர்மானித்தது.

இருப்பினும், பகுப்பாய்வில் அதில் தீங்கு விளைவிக்கக்கூடிய பற்றீரியாக்கள் கண்டறியப்பட்டதை அடுத்து, சீன உரத்துடன் நாட்டுக்குள் பிரவேசிக்க இருந்த சரக்கு கப்பலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் சீனா மேலும் கோபத்துக்கு உள்ளானது.

இலங்கை தர நிலை நிறுவனங்கள் உள்ளிட்டவை இரண்டு மாதிரிகளில் மண், தாவரங்கள் மற்றும் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள், நோய்க் கிருமிகள் மற்றும் நோய்களைக் கண்டறிந்ததாக ஆராய்ச்சி குழு தெரிவித்துள்ளது.

உண்மையில், இலங்கை விஞ்ஞானிகளின் கருத்துப்படி இந்த உரம் முழுமையாகவே நோய்க்கிருமியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் அது அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை ஏற்படுத்துகிறது என சிந்தனைக் குழு தெரிவித்துள்ளது.

சிந்தனைக் குழுவின் கருத்துப்படி, இலங்கையின் தலைமைக்கு சீனாவின் அழுத்தம் பலனளிக்கவில்லை.

இதனால், இலங்கை மக்கள் வங்கியை சீனா கறுப்புப்பட்டியலில் சேர்த்துள்ளதாக அறிவித்தது.

தமது நாட்டின் நிறுவனம் ஒன்றால் ஏற்றுமதி செய்யப்பட்ட உரங்களை இலங்கை அனுமதிக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள சீனா தயாராக இல்லை என்பது இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது.

ஆகவே பீஜிங் கொழும்பை தன்னுடன் இணங்கிச் செல்வதற்கு அழுத்தங்களை தந்திரமாகப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இலங்கையின் நட்பு நாடான சீனா தனது தோல்வியிலிருந்து எவ்வாறு மீளப் போகின்றது.

அதனை ராஜபக்ஷ அரசாங்கம் எவ்வளவு சிறப்பாகக் கையாளுகிறது என்பதைப் பார்க்க அனைத்துக் கண்களும் ஆவலாக உள்ளன.

# வாசு, விமல் மற்றும் கம்மன்பில அரசில் இருந்து வெளியேறுவர்!

## எதிர்வு கூறுகிறார் ராஜித

அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்ட அணியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவார்கள் என முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன எதிர்வு கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்த அணியினருக்குத் தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள செய்தித்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்– பிளவுபடுவதற்கு முன்னர் போராட்டம் நடக்கும். தற்போது அந்த அணியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அடுத்த கட்டமாக அந்த அணியினர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவார்கள்.

அவ்வாறு அரசாங்கத்தில் இருந்து வெளியேறவில்லை என்றால் அவர்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது. இதனை அந்த அணியினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

உரிய நேரம் வரும் வரை அவர்கள் காத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் இந்த அணியினர் நாங்கள் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய மாட்டார்கள்.

அவர்கள் தனியான அணியாக எதிர்க் கட்சியில் இருப்பார்கள் என நம்புகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு சுரேன் ராகவன் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், 2021 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒருகோடி ரூபாவில் 20 லட்சம் ரூபாவை முல்லைத்தீவு வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒதுக்கியுள்ளார்.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 40 லட்சம் ரூபா ஒதுக்கியிருந்த நிலையில் மேலும் 20 லட்சம் ரூபாவை ஆலயத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஆலய நிர்வாக சபைத் தலைவரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒதுக்கியுள்ளார். இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் 14 பாட சாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன் மக்களுக்கான பல அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை மன்னார் மாவட்டத்துக்கு 12.5 லட்சமும் வவுனியா மாவட்டத்திற்கு 1.25 மில்லியனும் கொழும்பு மாவட்டத்திற்கு 10 லட்சமும் கம்பஹா மாவட்டத்திற்கு 5 லட்சம் ரூபாவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செவ்வாய் கிரகத்தின் புதிய படங்களை வெளியிட்டது நாசா!



செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் இருந்தனவா என்பது பற்றிய ஆய்வுக்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, 'பெர்சவரன்ஸ்' என்ற ரோவரை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைத்தது.

செவ்வாயின் மேற்பரப்பில் உள்ள மண், கல் மற்றும் பாறைகளை ஆய்வு செய்வதற்காக இந்த விண்கலம் அனுப்பப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி அனுப்பப்பட்ட இந்த விண்கலம், கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாய் கிரகத்தில் 'ஜெசேரோ பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படும் பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதற்கு முன் நாசா அனுப்பிய ஆர்பிட்டர்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்களின் அடிப்படையில், இந்த குறிப்பிட்ட பள்ளத்தாக்கு பகுதியில் நீர்நிலைகள் இருந்ததற்கான ஆதாரம் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதியதால், இந்த 'ஜெசேரோ பள்ளத்தாக்கு' பகுதியை ஆய்வுக்காக நாசா தேர்ந்தெடுத்தது.

ஏற்கனவே 'பெர்சவரன்ஸ்' ரோவர் மூலம் எடுக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் பல படங்களை நாசா வெளியிட்டு இருந்தது. அந்த வகையில் தற்போது, முன்பு எப்போதும் கண்டிராத புதிய படங்களை பெர்சவரன்ஸ் ரோவர் நாசாவிற்கு அனுப்பியுள்ளது.

அதாவது செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் பாறைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தினை முதன் முறையாக படம் பிடித்து அனுப்பியுள்ளது. அந்த படத்தினை நாசா தற்போது வெளியிட்டுள்ளது.

நாசாவானது 1970 ஆம் ஆண்டு முதல் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்காக பல விண்கலன்களை அனுப்பி வருகிறது. தற்போது அந்த ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருந்ததா இல்லையா என்பதையும், இந்த கிரகம் ஒரு நாள் மனிதர்கள் வாழக்கூடியதாக மாறுமா என்பதையும் ஆய்வின் முடிவுகள் ஒரு நாள் வெளிச்சம் போட்டுக் காட்டலாம்.

# அகதிகள் போலந்து நாட்டுக்குள் நுழைவதற்கு ரஷ்யாதான் காரணம்

## போலந்து பிரதமர் குற்றச்சாட்டு



பெலாரஸ் அகதிகள் தங்கள் நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கு ரஷ்யாதான் மூலகாரணம் என போலந்து பிரதமர் மாடேயுஷ் மொராவிஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நாடாளுமன்றத்தில் கூறுகையில், 'பெலாரஸில் இருந்து போலந்துக்குள் சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கான அகதிகள் அலை அலையாகப் படையெடுத்து வருவதற்கு ரஷ்யா தான் தூண்டுதலாக இருந்து வருகிறது. இது, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைத்தன்மையைக் குலைப்பதற்காக நடத்தப்படும் தாக்குதல் ஆகும்.

இந்தத் தாக்குதலுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் மூளையாக இருந்து செயற்படுகிறார். போலந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக அகதிகளை அவர் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகிறார்' என கூறினார்.


இதனிடையே போலந்து பெலாரஸ் எல்லையில் அகதிகளால் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து விளாடிமீர் புடின், ஜேர்மனியின் அதிபர் மெர்க்கலுடன் தொலைப்பேசியில் உரையாடியுள்ளார்.ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத பெலராஸ், ரஷ்யாவுடன் மிக நெருங்கி நட்புறவை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ உறுப்பு நாடுகளான போலந்து, லிதுவேனியா, லாட்வியா ஆகிய நாடுகளுக்கும் பெலாரஸிலிருந்து சட்டவிரோதமாக வர முயலும் அகதிகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், உரிய ஆவணங்களின்றி போலந்துக்குள் நுழைவதற்காக அந்த நாட்டு எல்லைப் பகுதியில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு அகதிகள் முகாமிட்டுள்ளனர். பெரும்பாலும் மேற்கு ஆசிய நாடுகளிலிருந்தும் பிற ஆசிய நாடுகளிலிருந்தும் வந்துள்ள அந்த அகதிகள், பெண்கள் குழந்தைகளுடன் கடும் குளிரில் ஆபத்தான நிலையில் அங்கு தங்கியுள்ளனர்.

போலந்துக்கள் சட்டவிரோதமாக நுழைய அகதிகளை பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகனென்கோ தூண்டி வருகிறார் என ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன. எனினும், இந்தக் குற்றச்சாட்டை பெலாரஸ் மறுத்துள்ளது.

# இஸ்ரேலிய தூதரை மிரட்டினார்களா? விசாரணை ஆரம்பம்



இஸ்ரேலிய தூதரை மாணவர்கள் மிரட்டினார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் லண்டன் ஸ்கூல் ஒஃப் எகனாமிக்ஸ் பல்கலைக் கழகத்தில் மாணவர் விவாத சமூகத் தால் நடத்தப்பட்ட மத்திய கிழக்கின் எதிர்காலம் குறித்த நிகழ்வில் பேசுவதற்கு Tzipi Hotovely அழைக்கப்பட்டார்.

அவர் நிகழ்வு நிறைவுப் பெற்று பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும்போது, எதிர்ப்பாளர்களின் கூச்சலினால் அவர் விரைந்து செல்லும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

இந்தநிலையில், இதுகுறித்து அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால், இது தனக்கு சிறந்த மாலை நேரமாக இருந்தது என்றும் தான் அச்சுறுத்தப்படவில்லை எனவும் Tzipi Hotovely தெரிவித்துள்ளார்.

இதனிடையே Tzipi Hotovelyயை நடத்திய விதம் வெறுக்கத்தக்கது என்று உள்துறை செயலாளர் பிரித்தி படேல் கூறினார். அத்துடன் இச்சம்பவத்தை விசாரிப்பதில் பொலிஸாருக்கு முழு ஆதரவு இருப்பதாகவும் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் அதிகாரிகள் கலந்துகொண்டமை மெட் பொலிஸ் உறுதிப்படுத்தியது. ஆனால் யாரும் கைது செய்யப்படவில்லை.

# தாய்வான் நாட்டின் அருகே சீனப் படைகள் போர்ப் பயிற்சி

அமெரிக்க காங்கிரஸின் பிரதிநிதிகள் குழுவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தாய்வான் அருகே சீன இராணுவப் படைகள் போர் பயிற்சிகளை நடத்தி வருகின்றன.

தாய்வான் ஜலசந்தி பகுதியில் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான அவசியமான நடவடிக்கை என்று சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், பயிற்சிகளின் நேரம், பங்கேற்பாளர்கள் மற்றும் இடம் பற்றிய எந்த விவரங்களையும் அது வெளியிடவில்லை.

தங்களை மீறி தாய்வானுடன் பிற நாடுகள் தூதரக உறவு கொள்வதற்கு சீனா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

எனினும்,தாய்வானுடன் அதிகாரபூர்வ மற்ற தூதரக மற்றும் இராணுவ நட்புறவை அமெரிக்கா பேணி வருகிறது.

சீனாவில் கடந்த 1949 இல் நடந்த உள்நாட்டுப் போருக்கு பிறகு தாய்வான் தனி நாடாக உருவானது. ஆனாலும் தாய்வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசாங்கம் கூறி வருகிறது.

எனினும் தாய்வான், சீனாவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

ஆனால், தேவை ஏற்பட்டால் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்கமாட்டோம் என சீனா மிரட்டியும் வருகிறது.

இந்த சூழலில் கடந்த 72 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனா தாய்வான் இடையிலான இராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனிடையே, எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் தங்கள் நாட்டை சீனா ஆக்கிரமிக்கக் கூடும் என்று தாய்வான் பாதுகாப்புத் துறை அமைச்சியுகுவோ செங் கும் அச்சம் தெரிவித்துள்ளார்.





# கோவாக்சின் செயல்திறன் 77.8 சதவீதம் லான்செட் ஆய்வறிக்கையில் தகவல்

இந்திய அரசின் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பாரத் பயோடெக் நிறுவனம் இணைந்து தயாரித்த 'கோவாக்சின்' தடுப்பூசி, கொரோனா வைரஸ் நோய்க்கு எதிராக 77.8 சதவீத செயல்திறன் கொண்டிருப்பதாக 'த லான்செட்' என்ற மருத்துவ இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் மிகவும் ஆபத்தான டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக 'கோவாக்சின்' தடுப்பூசி 65.2 சதவீதம் பயனுள்ளதாக இருப்பதாகவும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் இதை மேலும் உறுதிப்படுத்த கூடுதல் ஆய்வுகள் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளில் பொதுவாக பயன்படுத்தப்படும் 'செயலிழந்த-வைரஸ் தொழில்நுட்பம்'தான் கோவாக்சின் தடுப்பூசியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் 2 டோஸ்களை செலுத்திக்கொண்டவர்களுக்கு, 2 வாரங்களுக்குப் பின்னர் அவர்களது உடலில் ஒரு வலுவான எதிர்ப்புச் சக்தி உருவாகிறது என லான்செட் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நவம்பர் 2020இல் இருந்து மே 2021க்கு இடையில் 18-97 வயதுடைய 24,419 தன்னார்வலர்களைக் கொண்டு நடத்தப்பட்ட சோதனையின்போது கடுமையான தடுப்பூசி தொடர்பான இறப்புகள் அல்லது பாதகமான நிகழ்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று லான்செட் மருத்துவ இதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில், கோவாக்சின் இரண்டாவது டோஸ் தடுப்பூசி போடப்பட்ட 14 நாள்களுக்குப் பிறகு கொரோனாவின் தீவிரத்தன்மைக்கு எதிரான செயல்திறன் 77.8 சதவீதமாக இருந்தது. டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக 65.2 சதவீத செயல்திறன் கொண்டுள்ளது. ஆனால், இதை உறுதிப்படுத்த கூடுதல் ஆய்வுகள் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கோவாக்சின் தடுப்பூசி கடந்த ஜனவரி மாதம் முதல் அவசர கால பயன்பாட்டுக்கு வந்தது. இருப்பினும் தடுப்பூசியின் செயல்திறன் குறித்த முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என சர்ச்சைகள் எழுந்த நிலையில், இந்த லான்செட் அறிக்கை மூலம் கோவாக்சின் செயல்திறன் குறித்த சர்ச்சை முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோவாக்சின் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டிற்கு உலக சுகாதார அமைப்பு கடந்த வாரம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.என்.எக்ஸ். வழக்கில் ஆவணங்களை வழங்காதிருக்க சி.பி.ஐ. தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி

ஐ.என்.எக்.ஸ். மீடியா என்ற நிறுவனத்துக்கு வெளிநாடுகளிலிருந்து அந்நிய முதலீடு பெற்றுக்கொடுத்ததில் முறை கேடு நடந்ததாக முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், அவரது மகன் கார்த்தி சிதம்பரம் உள்ளிட்டோருக்கு எதிராக சி.பி.ஐ. மற் றும் அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது.



இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை மீதான விசாரணை டெல்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே ஐ.என். எக்ஸ். மீடியா வழக்கு விசாரணையின்போது இந்த வழக்குத் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தங்கள் தரப்புக்கு அளிக்க வேண்டும் என ப.சிதம்பரம், கார்த்தி சிதம்பரம் உள்ளிட்ட குற்றஞ் சாட்டப்பட்ட அனைவரும் சி.பி.ஐ. நீதிமன்றத்தில் கூடுதல் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

அதனையேற்ற சி.பி.ஐ. நீதிமன்றம், வழக்குத் தொடர்பான ஆவணங்களை குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு வழங்க சி.பி.ஐக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக சி.பி.ஐ. தரப்பில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு டெல்லி உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது இந்த மனுவை டெல்லி உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த வழக்கில் கார்த்தி சிதம்பரம் மற்றும் ப.சிதம்பரம் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு, திகார் சிறையில் அடைக்கப்பட்டு தற்போது பிணையில் வெளியே வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா – நேபாளம் நாடுகளுக்கிடையே மீண்டும் பேருந்து போக்குவரத்து ஆரம்பம்




கொரோனாவுக்கு முன்பு, மேற்கு வங்காள மாநிலத்தில் இருந்து நேபாளத்துக்கு பேருந்துப் போக்குவரத்து இயங்கி வந்தது.

கொரோனாவால் ஒன்றரை ஆண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துப் போக்குவரத்து தற்போது மீண்டும் தொடங்கியுள்ளது.

மேற்கு வங்காள மாநிலம் சிலிகுரியில் இருந்து நேபாள தலைநகர் காத்மண்டுக்கு பஸ் புறப்பட்டது. 45 இருக்கைகள் கொண்ட அந்த பஸ்ஸில் சில பயணிகள் மட்டுமே பயணம் செய்தனர்.

சிலிகுரியில் இருந்து செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு இந்த பேருந்து புறப்படுகிறது என்றும் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் மட்டுமே இதில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் கொரோனா விதிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சென்னையில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் முதல்வர் ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டது



சென்னையில் கடந்த சில நாள்களாக பெய்த கனமழையின் பாதிப்பால் பொதுமக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க இன்று சிறப்பு மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை ஆழ்வார்பேட்டையில் அமைக்கப்பட்ட மழைக்கால இலவச சிறப்பு மருத்துவ முகாமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200வார்டுகளிலும்நடைபெறுகின்றன. பருவமழை தொடர்ந்து பெய்துவருவதால், காய்ச்சல் உள்ளிட்ட நோய் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக சென்னையில் கொட்டித் தீர்த்த கனமழையால் சென்னையே வெள்ளக் காடாக மாறிப்போனது. இதனால், நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தது. சாலைகள், சுரங்கப்பாதைகள், தெருமுனைகள் எனதிரும்பியதிசையெங்கும் மழைநீர் ஆக்கிரமித்து, குடியிருப்புகளை தனித் தீவாகவே மாற்றியிருந்தது. திரும்பிய பக்கம் எல்லாம் தண்ணீராகக் காட்சி அளித்தபோதும், இன்னொரு புறம் மழைநீரை அகற்றும் பணியில் மாநகராட்சி, குடிநீர் வாரியம், தீயணைப்புத் துறை என அனைத்துத் துறை அதிகாரிகளும் முழுவீச்சில் பணியாற்றினர். மின் மோட்டார் மூலம் மழைநீரை அப்புறப்படுத்தும் பணி மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

# தண்ணீர் பரிசோதனை ஆய்வுகூடங்கள் இந்தியா முழுவதும் அமையவுள்ளன

இந்தியா முழுவதும் தண்ணீரின் அளவு, தரம், விநியோகம் ஆகியவற்றை மேம்படுத்த ஆறாயிரம் தண்ணீர் பரிசோதனை ஆய்வுகூடங்களை அமைக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே இரண்டாயிரம் பரிசோதனைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், மீதி நான்காயிரம் பரிசோதனைக்கூடங்களை வரும் ஆண்டுகளில் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் கொவத் கூறியுள்ளார்.

டெல்லியில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தண்ணீர் சேவையை மேம்படுத்தி ஒவ்வொரு கிராமத்துக்கும் தண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிசெய்ய மத்திய அரசு தரப்பரிசோதனை உள்கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது, என்று குறிப்பிட்டார். கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலுக்கு மத்தியிலும் 8.5 கோடி வீடுகளுக்கு குழாய்வழி குடிநீர் வழங்குவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு கோட்டை பூங்காவின் வாவிக்கரை ஓரமாக 800 மீற்றர் நடைபாதை அமைக்க திட்டம்



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலுள்ள யாட்வீதியில் அமைந்துள்ள கோட்டைப் பூங்காவின் வாவிக் கரை ஓரமாக 800 மீற்றர் நடைபாதை அமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன்மொழிவில் முன்னெடுக்கப்படவுள்ள நடைபாதை அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலில் மண்ணினால் அமைப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனை நிராகரிக்கப்பட்டு புதியயோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிகமாக செலவு செய்யப்படவுள்ள நிதியினை மட்டக்களப்பு மாநகர சபையின் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்களின் நீண்ட கால பாவனைக்கு ஏற்புடைவகையில் கொங்கிறீட் கற்களினால் பாதை அமைப்பதற்கென நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 4.2 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு 800 மீற்றர் தூரத்திற்கான பாதையை அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இக்கலந்துரையாடலில் மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஜே.லியணகே மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள், மண்முனை வடக்கு பிரதேச செயலக அதிகாரிகள், திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர்கள் எனப் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.



# மட்டக்களப்பில் காணாமல் போன முல்லைத்தீவு சிறுவன் மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் காணாமல் போன முல்லைத்தீவைச் சேர்ந்த சிறுவன் பாதுகாப்பாக மீட்கப்பட்டு தாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து மட்டக்களப்பு பருத்திச்சேனை, காயான்மடுவிலுள்ள தமது உறவினர் வீட்டுக்கு தாயாருடன் வந்த ஏழு வயது சிறுவன் அருகில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு தாயுடன் சென்றுவிட்டு தனியாக வீட்டிற்கு திரும்பிச் சென்ற வேளையில் வழிமாறிச் சென்றார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதை மாறிய சிறுவன் குறிஞ்சாமுனை சந்தியில் சென்ற போது கன்னங்குடாவைச் சேர்ந்த பிரதீபன் நபரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டார் என வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ். பிரியங்கர தெரிவித்தார்.

இதனிடையே, சிறுவனிடம் விசாரணைகளை மேற்கொண்ட வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ். பிரியங்கர தலைமையில் குற்றத் தடுப்பு பொலிஸார் சிறுவனின் தாயாரிடம் நேற்று மாலை பொலிஸ்நிலையத்தில் வைத்து சிறுவனை ஒப்படைத்தனர்.

திருகோணமலையில் இடம்பெற்ற

# வாள்வெட்டில் காயப்பட்டவரின் குடும்பத்தினர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கியது தொடர்பில் திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் குடும்பத்தினரால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

10 ஆம் திகதி இவ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை ஈச்சிலம் பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹிந்தபுரம் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் திருகோணமலை மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கருப்பையா மனோகர் (37வயது) என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி பொதுமக்களினால் சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மறு நாள் மூதூர் தள வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டார்.

பின்னர் சம்பவம் தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸ் நிலையத்தில் சந்தேகத்தின் பெயரில் நான்கு பெயர்களை முன் வைத்து முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் மூவரை கைது செய்து பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனவும் முறைப்பாடு தொடர்பில் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் தமக்கு முறையான நீதி வேண்டுமெனவும் கோரி வெட்டுக் காயங்களுக்கு உள்ளானவரின் குடும்பத்தினர் திருகோணமலை மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

மேலும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுத்து தமக்கு நியாயமான நீதியினை பெற்றுத் தருமாறு உறவினர்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது சற்குரு மகாமின் வருடாந்த கொடியேற்றம் நேற்று



அல் மதாத் யா கௌதுல் அலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் நினைவாக வருடா வருடம், சாய்ந்தமருது சற்குரு மகாம் ஷாவியதுல் வாஹிதிய்யாவஹல்லாஜியாவில் நடைபெறும் மௌலித் மஜ்லிஸும் கொடியேற்றமும் இம்முறையும் நேற்று மாலை சாய்ந்தமருது சற்குரு மகாம் தலைவர் எம்.எம்.எ.ஜப்பார் தலைமையில் சாய்ந்தமருதில் நடைபெற்றது.

வழமையாக வெகு விமர்சையாக நடைபெறும் இந்த நிகழ்வு இம்முறை கொரோனோ தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சிலருக்கு மாத்திரமே சுகாதார நடைமுறைகளை பேணி அனுமதி வழங்கப்பட்டி ருந்தது. மௌலவிமார்களின் மௌலித் முழக்கத்துடன் நிகழ்வின் பிரதம விருந்தினராக அஸ்ஸெய்யித் மக்கத்தார் அப்துல் மஜீத் கலீபத்துல் ஹல்லாஜ் அவர்களினால் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சற்குரு மகாம் செயலாளர் ஏ.சி.எம்.நிஸார், பொருளாளர் எம்.எம். பஸ்மீர், உட்பட நிர்வாகிகள், சற்குரு மகாமின் முக்கியஸ்தர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை கல்மெட்டியவில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழப்பு





திருகோணமலை தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கல்மெட்டியாவ, உல்பத்வெவ என்ற பகுதியிலே இவ்வாறு இரண்டு யானைகளும் இறந்துள்ளன என வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த யானைகள் முன்தினம் இரவு இறந்திருக்கலாம் எனவும், இரண்டு யானைகளும் எட்டு வயதுக்கு மேற்பட்டவையாக இருக்கலாம் எனவும், மின்சாரம் தாக்கி இறந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவிப்பதோடு, பரிசோதனையின் பின்னரே மேலதிக விவரம் தெரியவரும் எனவும் வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலாகாமம் பொலிஸார் மற்றும் வன ஜீவராசி அதிகாரிகளும் முன்னெடுத்துள்ளனர்.

# பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிக்குள் ஆஸ்திரேலியா



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், ஆஸ்திரேலிய அணி, பாகிஸ்தானை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

டுபாயில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மொஹமட் ரிஸ்வான் 67, பாபர் அசாம் 39 ஓட்டங்களையும் பகர் சமான் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்ட்ராக் 2 விக்கெட்டுக்களையும் பட் கம்மின்ஸ் மற்றும் அடம் சம்பா இருவரும் ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்த ஆஸ்திரேலிய அணி, இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. டேவிட் வோனர் 49 ஓட்டங்களையும், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், மத்தியு வேட் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 40, 41 ஓட்டங்களைப் பெற்றனர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக மத்தியு வேட் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. 2010ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறிய ஆஸ்திரேலிய அணி, 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்திருந்தது.

# உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கு முதல் தென்னமெரிக்க அணியாக பிரேஸில்



2022 உலகக்கோப்பைக்கு தகுதி பெற்ற முதல் தென் அமெரிக்க அணி என்ற பெருமையை பிரேஸில் பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் விளையாடவுள்ள அணிகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

தென்னமெரிக்க அணிகளுக்கான தகுதிச் சுற்றிலிருந்து முதல் அணியாக பிரேஸில் உலகக்கிணத்தொடருக்கு தகுதிபெற்றுள்ளது. நேற்று பிரேஸிலின் சாவ் பாலோவில் கொலம்பிய அணிக்கெதிராக நடைபெற்ற இந்தப் போட்டியில் 72 ஆவது நிமிடத்தில் லூகாஸ் பக்வெட்டா கோல் அடித்தார். அந்தப்போட்டியில் அடிக்கப்பட்ட கோலாக அதுமட்டுமே இருந்தது. இறுதியில் பிரேஸில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவைத் தோற்கடித்து, 2022 உலகக் கோப்பைக்கு தகுதி பெற்ற முதல் தென்னமெரிக்க அணி என்ற பெருமையைப் பெற்றது. 10 அணிகள் கொண்ட தென் அமெரிக்கக் குழுவில் 12 ஆட்டங்களில் 34 புள்ளிகளுடன் பிரேஸில் முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது இடத்தில் ஆர்ஜென்டீனா உள்ளது. புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஸ்டொக்ஹோம் ஓபன் டென்னிஸ்

# அரையிறுதியில் போவலோவ்

சுவீடனில் நடைபெற்றுவரும் ஸ்டொக்ஹோம் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், கனடாவின் டெனிஸ் போவலோவ் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

இந்தப்போட்டியில், கனடாவின் டெனிஸ் போவலோவ், பிரான்ஸின் ஆர்தர் ரிண்டர்க்னெக்கை எதிர்கொண்டார். விறுவிறுப்புக்குபஞ்சமில்லாமல்நடைபெற்றஇப்போட்டியில், முதல் செட்டை ஆர்தர் ரிண்டர்க்னெக் 6-4 என கைப்பற்றினார். இரண்டாவது செட்டில், விட்டுக்கொடுக்காது விளையாடிய டெனிஸ் போவலோவ், செட்டை 3-6 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால், வெற்றியைத்தீர்மானிக்கும்மூன்றாவது செட்பரபரப்பானது. அந்த செட்டை, 7-5 என செட்டை வென்று டெனிஸ் போவலோவ் அரையிறுதிக்கு முன்னேறினார்.

# நியூசிலாந்து டெஸ்ட் தொடர் இந்திய அணி அறிவிப்பு

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து மூன்று ரி-20 போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவிருக்கிறது. ரி-20 தொடர் நவம்பர் 17 அன்று தொடங்கி, 21 வரை நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடர் நவம்பர் 25 இல் ஆரம்பமாகவுள்ளது.

ரி-20 தொடருக்கான இந்திய அணியில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், முதலாவது டெஸ்ட் போட்டியில் விராட் கோலி விளையாடமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோகித் சர்மா தலைமையிலான ரி-20 அணியில், ரி-20 உலகக்கிண்ண அணியில் இடம்பெற்ற பாண்ட்யா, வருண் சக்கரவர்த்தி, ராகுல் சஹர், ஷர்துல் தாகூர் ஆகியோர் இடம்பெறவில்லை. சுழல்பந்து வீச்சாளர் சஹல் மீண்டும் அணிக்குள் வந்திருக்கிறார்.

விராட் கோலி, ஜடேஜா, பும்ரா, ஷமி ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.



இந்தநிலையில் டெஸ்ட் தொடருக்கான இந்திய அணிஇன்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. முதல் டெஸ்டில் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, முதல் டெஸ்டில் ரகானே தலைமையில் இந்திய அணி களமிறங்கவுள்ளது. புஜாரா துணைத் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது டெஸ்டில் விராட் கோலி அணியினருடன் இணைந்து தலைவராகவும் செயல்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரோகித் சர்மா, ரிஷப் பண்ட், பும்ரா, மி ஆகியோர் அணியில் இடம் பெறவில்லை.

இந்திய டெஸ்ட் அணி விவரம்: ரகானே, கே.எல். ராகுல், மயங்க் அகர்வால், புஜாரா, ஷுப்மன் கில், ஷ்ரேயஸ் ஐயர், ரித்திமான் சஹா, கே.எஸ். பரத், ஜடேஜா, அஸ்வின், அக்ஷர் படேல், ஜெயந்த் யாதவ், இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், மொகமட் சிராஜ், பிரசித் கிருஷ்ணா, விராட் கோலி

# பயணக் கட்டுப்பாடுகள் மீண்டும் விதிக்கப்படுமா?

## சுகாதார அமைச்சர் கருத்து

கொரோனா கட்டுப்பாட்டுக்கு மக்கள் வழங்கும் பங்களிப்பைப் பொறுத்தே பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



குறிப்பாக, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் மிக உயர்ந்த நடவடிக்கைகளை எடுக்கும்போது மக்கள் தங்களின் உயரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வழங்குகின்ற பங்களிப்புக்கு அமையவே, தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும் கொரோனா கட்டுப்பாட்டுக்கு மக்கள் வழங்கும் பங்களிப்பைப் பொறுத்தே பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் மக்கள் அதற்கு எதிர்மறையாக நடந்துகொண்டால், மீண்டும் பயணக் கட்டுப்பாடு போன்றதொரு சூழலை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப மக்கள் வாழும் சூழலை தயார் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# யாழில் 10 ஆயிரம் குடும்பங்கள் சீர்ற்ற காலநிலையால் பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுவரை 10 ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 194 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஒரு வீடு முழுமையாகவும், 111 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என ரி.என். சூரியராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தற்போது 4 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 44 குடும்பங்களைச் சேர்ந்த 153 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளமை குறியிடத்தக்கது.

# கொவிட்டுக்கு மத்தியில் டெங்கு பரவலும் தீவிரம்

கொரோனாவுக்கு மத்தியில் நாட்டில் டெங்கு காய்ச்சல் தொற்று நோயாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு வைரஸின் நான்கு வகைகளும் தற்போது இலங்கையில் பரவியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதென அந்தப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வீட்டுச் சூழல் உட்பட நுளம்புகள் பெருகும் அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொது மக்களை அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் தற்போது 23 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அத்தோடு, மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், நவம்பர் மாதத்தில் கடந்த 10 நாள்களில் மட்டும் ஆயிரத்து 361 வழக்குகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முழுவதும் 770 வழக்குகள் மட்டுமே பதிவாகியிருந்தன எனவும் இந்த நவம்பரில் வெறும் 10 நாள்களுக்குள் கிட்டத்தட்ட 1,000 மதிப்பெண்ணைத் தாண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டு; பருத்தித்துறையில் இருவர் கைது

15 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை 4 மணியளவில் தனித்து நின்ற 15 வயதுச் சிறுமியை பொலிஸ் காவலில் எடுத்துப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


பருத்தித்துறை கற்கோவளம் பகுதியிலுள்ள வீடொன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு அழைத்துச் செல்லப்பட்ட சிறுமி, இருவேறு நேரங்களில் 2 இளைஞர்களால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட மருத்துவ வல்லுநரின் மருத்துவ அறிக்கைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

19 மற்றும் 24 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் திடல் திறப்பு







**கலையமுதன்**

யாழ்ப்பாணம்,நவ.12

நவீன வசதிகளுடன் 5 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டுத் திடல் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களின் பிரித்தானியக் கிளையின் நிதிப்பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்த மைதானம் சம்பிரதாய பூர்வமாக இன்று கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில் மாறன், கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் ஜெயபிரகாஷ், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இலத்திரனியல் ஸ்கோர்போட், கழக மனை, பயிற்சிகளுக்கான இடம் போன்றன இந்தத் திடலில் உள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த விளையாட்டுத்திடல் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகரமான ஒரு மைதானமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மைதானத்தில் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதிற்குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2021இல் வெளியிடப்பெற்றது.